# வெள்ளி நூல் விழா அறிக்கை

## 18.03.2022

இளங்கலைத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு வெள்ளி தோறும் ஒரு நூல் அறிமுகம் செய்யும் நோக்கில் வெள்ளிநூல் எனும் நிகழ்வு **19.03.2021** அன்று தொடங்கப்பட்டது. அன்று முதல் வெள்ளிதோறும் ஒரு வெள்ளிநூல் விழா நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக **18.03.22** வெள்ளிக்கிழமை பிற்பகல் **1:30** மணிக்கு வெள்ளிநூல் விழா தொடங்கியது .

**தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. பிரகலாதன்** முன்னிலையுரை நிகழ்த்தி இவ்விழாவினைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவில் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், மூன்றாமாண்டு மாணவர்கள், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் முதல் ஆண்டு மாணவர்கள் பங்கேற்றனர். நமது சிந்திக் கல்லூரி பிறதுறைத் தலைவர்களும் மாணவர்களும் வருகை புரிந்தனர். இந்நிகழ்வில் வரவேற்புரையை **செல்வி வே. வித்யா** இரண்டாம் ஆண்டு மாணவியும் தொகுப்புரையை **செல்வி நா. பிரியா** இரண்டாம் ஆண்டு மாணவியும் செய்தனர்.









**முதலாழ்வார் மூவர்** எனும் தலைப்பில் செல்வி **இ. அபிநயா** மூன்றாம் ஆண்டு மாணவியும் **கண்ணப்ப நாயனார்** எனும் தலைப்பில் செல்வி இரா. வைஷ்ணவி இரண்டாம் ஆண்டு மாணவியும் அறிமுகம் செய்தனர். மாணவர்களும் ஆசிரியர்களும் நூல் குறித்த கருத்துகளையும் வினாக்களையும் எழுப்பினர். மாணவர்கள் அதற்கான விளக்கங்கள் தந்தனர். **செல்வி தா. கனிமொழி** இரண்டாம் ஆண்டு மாணவி நன்றியுரையைக் கூறினார். விழா இனிதே நிறைவு பெற்றது.